உ
சிவமயம்



தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே.

— யோகர் சுவாமிகள் நற்சிந்தனை

கோவிலாக்கண்டி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும்

யாழ். கொழும்புத்துறை மேற்கை

வதிவிடமாகவும் கொண்ட

சைவ வேளாண்குல திலகர்

கட்டிட திணைக்கள இளைப்பாறிய லிகிதர்

உயர்திரு. கந்தையா

# சிவானந்தன்

அவர்களின்

அமரத்துவப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

5-8-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்."



# அமரர் கந்தையா சிவானந்தன்

| பூவுலகில் : | வானுலகில் : |
|---|---|
| 08 - 07 - 1910 | 06 - 07 - 1991 |

## திதி நிர்ணய வெண்பா.

ஆயபிர சோற்பத்தி ஆனி அபரபட்சம்
ஏய தசமிதனில் ஏகனடி — தூய
திருவார் சிவானந்தன் சேர்ந்தார்! செகத்தில்!
அருளாளர் என்றே அறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்திப் பயிர்வளர்த்த
## பாங்கார் சிவானந்தன் !

உயிருட்டம் உள்ளளவும் யோகர் சுவாமிகளின்
நயமார்ந்த போதனையை நாடி — அயர்வில்லாப்
பக்திப் பயிர்வளர்த்த மாங்கார் சிவானந்தன்
முத்திப் பலம்பெற்ருர் முன்.

நெற்றியிலே மூன்றுகுறி நேர்த்தியுடன் நீரணியும்
பற்றுடைய சைவப் பழமாவர் — சற்றயர்வு
கொண்டதுபோல் காலமுற்ருர் கூரார் சிவானந்தன்
கண்டனடி சேர்ந்துவிட்டார் காண்.

மாலையிலே பால்குடித்தார் மஞ்சகத்திற் பள்ளிகொண்டார்
மேலவனைச் சந்திக்க மேனிவிட்டார் - காலையிலே
பால்பண்டம் கொள்ளாது பார்விடுத்தே சென்றுவிட்டார்
சால்புண்மைச் சக்தியுற்ருர் தான்.

மன்றுளாடும் மாமணியை வைத்தீஸ் வரன்தன்னை
ஒன்றிவழி பாடுசெயும் உத்தமராம் - என்றுமிதம்
கூட்டும் தியானத்தாற் கோலமார் பக்திமயம்
காட்டிப்பே றுற்றனரே காண்.

கட்டிடத்தி லைக்களத்தில் கண்ணியமார் நல்லிகிதர்
தொட்டபணி தூய்மையுறத் தொண்டுசெய்வார்- கெட்டிநெறிப்
பண்பாடு நாகரீகம் பாங்கார் சிவர்னந்தன்
எண்பாங்கில் ஏற்றமுளார் எண்.

---

ஒரு பொல்லாப்பு மில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்.
முழுதும் உண்மை ! — யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சிவபதமுற்ற
# கந்தையா சிவானந்தன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஆசிரியப்பா.

யாழ்மா நகரம் இசையாள் சிகரம்
வாழ்வார் தமிழர் வளமார் அகரம்
அகரம் தமிழின் ஆதி முதலாம்
அதுபோ லாகும் யாழ்மா நகரம்
யாழ்மா நகரம் எனும்பாங் கரிலே
கொழும்புத் துறையும் குலவும் நகரம்
குணமார் கொழும்புத் துறையூர் என்றே
கூர்ந்து நோக்கலும் குதூகல மாகும்
கூருள ஒற்றைக் கொம்பன் விநாயகன்
கோவிலே கொண்ட குணமார் பதியதாம்
ஸ்ரீமன்று ளாடும் வதிரி பீட
விநாயக மூர்த்தி பிள்ளையார் கோவில்
என்பதே அதனின் ஏற்றமார் நாமமாம் !
போதனை ஞானம் பொலிந்து விளங்கிய
மேதையாம் யோகர் சுவாமி அவர்கள்
வாக்கு வசிகரம் வளமார் பதியாம்
கொழும்புத் துறையூர் மேற்நயர் நிதியாம் !
இந்து மகாவித்தி யாலயம் கல்வி
ஏற்றமார் நற்சனசமூக நிலையம்
சீர்ஜெற் லைனர்ஸ் கழகம் ஆகிய
செம்மைச் சிறப்புள செல்வப் பதியாம் !
இப்பதி யிடத்தில் வாழ்ந்தவ ராகிய
செப்பமா திலகம் சீர்சிவா னந்தனும்
ஆயி ரத்துத் தொள்ளா யிரத்து
பத்தாம் ஆண்டு ஆடி மாதம்
ஆங்கிலத் திகதி எட்டாம் நாளில்
அவனியிற் பிறந்தார் சிவா னந்தனார் !
வேளாண் மரபில் விளங்கிய பண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ ராஜேந்திர வம்சா வழியில்
தோன்றிய செம்மலாம் சிவா னந்தனே!
கோயிலாக் கண்டி குலவே ளாளர்
முருகேசம் பிள்ளை என்பவர் சுதனும்
சிவா னந்தனின் தந்தையா ராகிய
கந்தை யாவென் கனதன வானும்;
கந்தை யாவென் கனதன வானும்
செல்லம் மாவென் சீரா ரணங்கும்
அன்புயர் தம்பதி யாய்நிறை வுற்றே
அவனியிற் பெற்ற மக்கட் பேறில்
சிவானந் தனுமோர் செல்வப் பேறும்!
காலம் சென்ற சிவசி தம்பரம்
காலம் சென்ற முருகேச பிள்ளை
காலம் சென்ற சிரோன்மணி என்பார்
வாழும் அன்பர் சிவகுரு நாதன்
காலம் சென்ற அன்புயர் தம்பி
சூரிய நாரா யணபிள்ளை என்பார்
இவர்கள் அனைவரும் சிவானந்த னோடு
கூடப் பிறந்த பிறவிக ளாவர்!
நீர்கொ ழும்பினைப் பிறந்தக மாக
நேர்த்தியாய்க் கொண்ட சிவா னந்தனும்
யாம்பர மேஸ்வரா கல்லூரி தன்னில்
நாள்மலர் கல்வியை நயமுறப் பெற்றார்!
கட்டிடக் கிணைக்கள இலிகித ராகியே
கொழும்பிலும் பளையிலும் யாழ்ப்பா ணத்திலும்
சேவையே யாற்றினர் சிவானந்த னென்பார்
கோயிலாக் கண்டி குலவே ளாளர்
சுப்பிர மணியம் சுதனே யாய
குமரை யாவும் விசா லாட்சியும்
பெற்றநல் மகளாம் சிவபாக் கியத்தைத்
திருமணம் செய்தார் சிவானந்தன் என்பார்.
சிவசிவ வென்றே செப்புதற் குயர்ந்த
சிவா னந்தனும் சிவபாக் கியமும்
அன்பின் மேலாம் அன்புயர் வுற்றே
திருமதி வடிவாம் பிகைகுண ரெட்ணம்
திருமதி சிவகாம சுந்தரி இராஜேந்(திரன்)
லிபியா தனில்வாழ் சிறீகாந் தாநல்
திருமதி மகேஸ்வரி சுந்தர லிங்கம்
திருமதி யோகேஸ்வரி செல்வகு மாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார் நல்லுயர் ஆனந்த குமார்நல்
சூரிய குமார்நல் தேவ குமார்நல்
சர்வலோ கேஸ்வரி என்பவ ராகிய
மக்களைப் பெற்றே மகிழ்ச்சியே யுற்றார்
வடிவாம் பிகையின் துணைவரே யாய
சீர்குண ரெட்ணம் சிவானந் தன்தம்
மூத்த மருமகன் முறையே யுற்றார்
சிவகாம சுந்தரி துணைவரே யாய
இராஜேந் திரனும் சிவானந் தன்தம்
இரண்டாம் மருமகன் இதமே யுற்றார்!
லிபியா தனில்வாழ் சிறிகாந் தாவின்
துணைவியே யாகிய தேவ சாந்தினி
சிவானந் தன்நல் மருமக ளாவர்!
மகேஸ்வரி தம்மின் துணைவரே யாகிய
சுந்தர லிங்கம் சிவானந் தன்நல்
மருமக னாகி முறைநிறை வுற்றார்!
யோகேஸ் வரியர் துணைவரே யாகிய
செல்வக் குமாரன் சிவானந் தன்நல்
மருமக னெனுமுயர் முறைநிறை வுற்றார்!
சிவகுமார் தம்மின் துணைவியா ராகிய
சக்தி தேவி சிவானந் தன்நல்
மருமக ளாகியே முறைநிறை வுற்றார்
கனடா தனில்வாழ் ஆனந்த குமார்நல்
துணைவியா ராகிய அம்பிகை என்பார்
சிவானந் தன்நல் மருமக ளாவார்!
சிவகாம சுந்தரி செல்வ மக்களாம்
ராஜீவ் துர்க்கா சுரேன் என்பார்
மகேஸ்வரி புத்திரி சுகன்யா என்பார்
சிவகுமார் புத்திரி இந்துகா என்பார்
சிவானந் தன்நல் பேர மக்களாம்!
மக்கள் நல்மரு மக்கள் அன்புயர்
பேரப் பிள்ளைகள் இனசன சுற்றம்
எல்லாம் இறையருட் கீடா காதே
எப்போ முடிந்த முடிவே என்று
இதமாய்ச் செப்பினர் யோகர் சுவாமிகள்
அப்படி யேசிவா னந்தன் சிவபதம்
அன்புடன் பற்றினர் அஞ்சலி செய்குவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளம் கவர்ந்த அன்பர் சிவானந்தன்

வையத்துள் வாழ்ந்து என்பது வயதைப் பூர்த்தியாக்கி இறைவனடி எய்தியவர் அமரர் கந்தையா சிவானந்தன் அவர்கள். கட்டிடத்திணைக்கள இலிகிதராக பல்லாண்டு கடமையாற்றி தமது ஆற்றலாலும், ஒழுக்கத்தாலும் மக்களது அன்பு உள்ளங்களை கவர்ந்து திகழ்ந்தார்.

இவர் நற்பண்புகள் வாய்ந்த வேளாண் மரபில் விளங்கிய பண்டைய தேவராசேந்திர வம்சவழியில் தோன்றியவராகும். நாவற்குளி கோவிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை மேற்கை வதிவிடமாகவும் கொண்டவர்.

எமது வித்தியாலயத்துடன் இவர் நீண்டகால தொடர்புள்ளவர் இவரது சற்புத்திரர்கள் யாவரும் எமது வித்தியாலயத்திலேயே ஆரம்பக்கல்வியை கற்றுள்ளனர். இவர்கள் இன்று பலராலும் பாராட்டக்கூடிய பண்பாளர்களாக வாழ்கின்றனர்.

அன்பிலும் அருளிலும் அறத்திலும் தான் வாழ்வை உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்த தனது பிள்ளைகளையும் அவ்வழியில் வாழ வழிகாட்டியவர் இப்பெரியார் சைவவாழ்வு வாழுதல் அவசியம் என்றும் சொல்லும் செயலும் ஒன்றாக இருத்தல் வேண்டும் என்றும் வற்புறுத்துவார்.

அமரர் தினமும் யோகர்சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களைப் பாடுவார். சிவசின்னங்களை அணிந்து அமைதியாக தியானிப்பார். சிவ நெறியேசிந்தித்து எம்பெருமான் திருவடிக்கே ஆளாகிப்போனார்: இவரது ஆன்மா இறைவனுடன்சேர்ந்து இன்பம் பெறுவாராக

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கா. கணேசதாசன்
அதிபர்
(ஆசிரியர் மாணவர் சார்பில்)

யா/கொழும்புத்துறை
இ. ம. வி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

முதலாம் திருமுறை பண். நட்டபாடை

அங்கமும் வேதமு மோது நாவ
ரந்தணர் நாளு மடி பரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருக னிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமங்கு
சீர்கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

ஆறாம் திருமுறை பண். குறிஞ்சி

ஓசை யொலியெலா மானாய் நீயே
யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியேன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

ஏழாம் திருமுறை பண் செந்துருத்தி

மீளாவடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை
வேண்டாதே
மூளாத் தீப்போலுள்ளே கனன்று முகத்தான்
மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்களல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆநந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பானித் தெருவே
ஐயாநீயுலாப் போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணுரைச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத் திரைபோக்கிய.
— சுந்தரனே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லைவளர்க நம்பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணசல மமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லையிடை நடுவிற்
குறிக்கிமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன் கச்சி யேகப்பனே.

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

நன்றாரீற் பூட்டிய சூத்திரப் பாவைநன் றூர்தப்பினால்
தன்றாலும் ஆடிச் சலித்திடுமோ அந்தத் தன்மையைப் போல்
உன்றால் யானுந் திரிவதல்லால் மற்று உனைப்பிரிந்தால்
என்றால் இங்கு ஆவதுண்டோ இறைவா கச்சி ஏகம்பனே.

நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை ஜென்மமோ
என்செய் வேன்கச்சி யேகப்ப நாதனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன பேயது காணன் மருந்துணக்கே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே—பருத்ததொந்தி
நம்பதென்று நாமிருப்ப நாய் நரிகள் பேய்கழுகு
தமதென்று தாமிருக்குந் தான்.

என்செய லாவது யாதொன்று இல்லை இனித்தெய்வமே
உன்செயலேஎன்று உணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.

---

## மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கொடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னை லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம்!
மங்களம் ஜெய மங்களம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமெடி

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே
கவலையெல்லாம் போகுமெடி

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோக நாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னேனெடி - கிளியே
பொல்லாங்கு தீருமெடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சாவழி : கந்தையா + செல்லம்மா

சிவசிதம்பரம் (காலஞ்சென்ற) — வடிவாம்பிகை + குணரெட்ணம்

முருகேசபிள்ளை (காலஞ்சென்ற) — சிவகாமசுந்தரி + இராஜேந்திரன் — ராஜீவ், துர்க்கா, சுரேஷ்

அமரர் சிவானந்தன் — சிறீகாந்தா (லிபியா + தேவசாந்தினி

சிரோண்மணி (காலஞ்சென்ற) — மகேஸ்வரி + சுந்தரலிங்கம் — சுகன்யா

சிவகுருநாதன் — யோகேஸ்வரி + செல்வகுமாரன்

சூரியநாராயணபிள்ளை (கா. செ.) — சிவகுமார் + சக்திதேவி — இந்திகா

ஆனந்தகுமார் + அம்பிகை (கனடா)

குமாரையா + விசாலாட்சி

சரஸ்வதியம்பா (காலஞ்சென்ற)

மனைவி, சிவபாக்கியம் — சூரியகுமார், தேவகுமார், சர்வலோகேஸ்வரி

சிவசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி கூறுகின்றோம்!

எமது குடும்பத்தலைவரின் மறைவின் போது உறுதுணையாக நின்று எமக்கு உதவிய அன்பர்கட்கும் நேரிலும் தபால் தந்தி மூலமும் தம் அநுதாபத்தை தெரிவித்தோருக்கும், மாலை அணிவித்து, மலர்வளையங்கள் சாத்தி தம் அஞ்சலியை செலுத்தியோருக்கும், மரணச்சடங்கின்போது இரங்கல் உரையாற்றியவர்களுக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்களில் எங்களுடன் இணைந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்தித்தோருக்கும், இம் மலருக்கு தம் நினைவலைகளை அனுப்பியோருக்கும், அமரரின் வாழ்க்கை வரலாற்றினை சிறப்புடன் உருவாக்கித்தந்த அரியாலையூர் கவிஞர். வே. ஐயாத்துரை அவர்களுக்கும், இம் மலரை அச்சாக்க உதவிய நல்லை கண்ணன் அச்சகத்தினருக்கும் இதய தூய்மையுடன் எமது நன்றியை நவில்கிறோம்.

வணக்கம்

92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
05 -08- 1991

இங்ஙனம்
மனைவி, மக்கள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org